


அமரர்

# திரு.நடராஜா நவரத்தினராசா

(ஓய்வுநிலை ஆசிரியர்)

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

## நினைவு மலர்

19.09.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



ஓய்வுநிலை ஆசிரியர்

அமரர்

# நடராஜா நவரத்தினராசா

அவர்களின்

சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

19.09.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காகவும்,

பண்பு நிறைந்த பேரொளியாகவும்

பார் போற்றும் பண்பாளராகவும்

உற்றார்க்கு உறுதுணையாகவும் திகழ்ந்து

உமது உடலை மெழுகாக்கி

உயிரை திரியாக்கி

உதிரத்தை எண்ணெயாக்கி

இறுதிவரை எமக்காய் உருகி

எம்மனதில் நீக்கமற நிறைந்திட்ட

எம் ஆருயிர்த் தந்தையே!

எங்கள் அன்புத் தெய்வத்தின்

ஆத்மா சாந்திக்காக பிரார்த்தித்து

உங்கள் பாதக்கமலங்களில்

இம் மலரைக் காணிக்கையாகச்

சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**நினைவால் துயருறும்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அன்னை மடியில் 07 . 11 . 1949



ஆண்டவன் அடியில் 20 . 08 . 2022

அமரர்

# திரு. நடராஜா நவரத்தினராசா

(ஓய்வுநிலை ஆசிரியர்)

## திதிவெண்பா

சுகத்தை நல்கும் சுபகிருது வருடம் ஆவணி இருபதில்
சனிக்கிழமை ரோகிணி நட்சத்திரம் கூடிய - அபரபக்க நவமியில்
தனிப்புகழ் கொக்குவில் தனில் வந்துதித்த உத்தமர்
நடராசா நவரத்தினராசா சென்றடைந்தார் நடராஜர் திருப்பாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

கூற்றாயினவா றுவிலக் ககலீர்
கொடுமை பலசெய்தன நானறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம்படியே
குடரோ டுதடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவ பெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தனியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மன்னுலக தில்லை! வளர்க நம்
பக்தர்கள்! வஞ்சகர் போய்அகல
பொன்னின்செய் மண்பத்துள்ளே புகுந்து
புவனி எல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்க ணான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுஞ்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையா னாடுமா னந்த
வெல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையும் மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசெந்த போதென் துயர்கெடமாமயில் வரவேணும்
அமைந்தவேலும் புயமிசைமேவிய பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வுநிலை ஆசிரியர்

# அமரர் நடராஜா நவரத்தினராசா

## அவர்களின்

# வாழ்க்கைப் பயணம்

## 1949 - 2022

இந்து மாகடலின் முத்தாக விளங்கும் இலங்கைத் திருநாட்டின் சிகரமாக விளங்குவது யாழ்ப்பாணம். இங்குள்ள கிராமங்களில் சகல வளங்களும், கோயில்களும், கல்விக் கூடங்களும் சிறந்து விளங்கும் கொக்குவில் பதியில் பக்தி நெறியுடன், பண்புடன் வாழ்ந்த அமரர்களான தம்பிப்பிள்ளை நடராசா – இரத்தினம் தம்பதிகளின் இல்லற வாழ்வின் பேறாக மூன்று புத்திரர்களைப் பெற்றெடுத்தனர். அவர்களின் சிரேஸ்ட புத்திரராக 1949.11.07ம் நாள் திரு. நவரத்தினராசா அவர்கள் பூமியில் வந்துதித்தார். அவரின் அருமைச் சகோதரர்களாக திரு.ஜீவரத்தினராசா, திரு.ஜெயரத்தினராசா ஆகியோர் பிறந்தனர்.

திரு.நவரத்தினராசா அவர்கள் சிறு வயது முதல் தூய்மையும் ஒழுக்கமும் கொண்டு சிறந்த கல்வி கற்கும் ஒருவராக விளங்கினார். அவர் தனது ஆரம்பக் கல்வியை யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்திலும் இடைநிலை, உயர்கல்வியை யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கற்றார். பின்னர் தனது தொழிலைத் தேர்ந்தெடுக் கையில் 1979.07.10 தொடக்கம் ஆசிரியராக தனது சேவையைத் தொடங்கினார். திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள குச்சவெளி மகாவித்தியாலயத்திலும் தனது முதல் சேவையைத் தொடங்கிய அமரர் 1983.02.01 தொடக்கம் இரு வருடங்கள் யா/பலாலி ஆசிரியர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விஞ்ஞான பாட ஆசிரியர் பயிற்சியை மேற்கொண்டார். அதன்பின் கிளிநொச்சி மாவட்ட, யாழ்மாவட்ட பாடசாலைகளில் தனது ஆசிரியர் சேவையைத் தொடர்ந்தார். இறுதியாக யா/ கொக்குவில் ஸ்ரீ இராமகிருஸ்ண வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி 2009.11.07 அன்று தனது 30 வருட கால ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் நவரத்தினராசா அவர்கள் ஆசிரிய சேவையில் இணைந்த பின் அவர்களின் பெற்றோர் அவரின் திருமணம் பற்றி சிந்தித்தனர். கோண்டாவில் கிராமத்தின் குமரகோட்டம் பகுதியில் சிறப்பாக வாழ்ந்த சின்னத்துரை – வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளான இராஜேஸ்வரி அவர்களைத் திருமணம் செய்து வைத்தனர். அவரும் பொதுத் துறையில் பயிற்றப்பட்ட ஆசிரியராக விளங்கினார். இவர்களின் இல்லற வாழ்வின் பயனாக சுவர்ணலதா, காண்டீபன் ஆகிய இரு புத்திரச் செல்வங்களைப் பெற்றுக் கொண்டனர். மகளைச் சிறுவயது முதல் தன் செல்லப்பிள்ளையாக மோட்டார் சைக்கிளில் பாடசாலை, தனியார் வகுப்புக்கள் என எல்லாவற்றுக்கும் ஏற்றிச் செல்வார். அதன் மூலம் மகளை கல்வியில் உயர்வடைய வைத்து ஒரு மருந்துக் கலவையாளராக மாற்றிப் பெருமை கொண்டார். மகளுக்குப் பொருத்தமான வாழ்க்கைத் துணையாக பன்னாலையில் சிறப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சிவஞானசம்பந்தர் புஸ்பராணி தம்பதிகளின் புத்திரரான, சுகாதார உதவியாளராக விளங்கும் கேதீஸ்வரன் அவர்களைத் தேர்ந்தெடுத்தார். இவர்களின் இல்வாழ்வின் பயனாக அருள்சாயி, ஸாயினி என்ற பேரப் பிள்ளைகளைப் பெற்றுக் கொண்டார். மகனான காண்டீபனை இலங்கை, இந்தியா ஆகிய இடங்களில் சிறப்புற உயர்கல்வி பெற உதவினார். இலங்கையில் சம்பத் வங்கியில் உத்தியோகத்தராக கடமையாற்றிய இவர் தற்போது அதிலிருந்து விலகி ஒரு சிறப்பான முதலீட்டாளராக விளங்குகின்றார். அவர் தனது வாழ்க்கைத் துணையாக மேரியனை இணைத்துக் கொண்டார். அவர் இந்தியா கேரளத்தில் பிரபல தொழில் முதலீட்டின் பங்காளராகவும், Fashion Designer ஆகவும் பணி புரிந்து வருகிறார். அதற்கு தன் சம்மதத்தினையும் வழங்கி, மகிழ்ச்சியையும் தெரிவித்துள்ளார். தனது உறவினர்கள், சுற்றத்தார் ஆகியோருடன் மகிழ்வுடன் உரையாடும் தன்மை கொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தனது குடும்பத்தினருடனும், சுற்றத்தாருடனும் வாழ்ந்த அவர் தனிப்பட்ட முறையில் இறை வழிபாட்டிலும் சுற்றுலாக்கள் செல்வதிலும், வாகனங்கள் உட்பட பல்வேறுபட்ட பொருட்களைச் சேகரிப்பதிலும் மிகவும் விருப்புடையவராக விளங்கினார். எப்பொழுதும் தூய்மையான, பொருத்தமான, அழகான உடைகளை அணிவதில் மிகவும் விருப்புடையவர். அவர் எங்கு சென்றாலும் ஒரு தோற்பையை தோளில் மாட்டியிருப்பார். அவர் பயணிக்கும் தன் மோட்டார்சைக்கிள், ஓட்டோ ஆகிய சொந்த வாகனங்களும் மிகவும் தூய்மையாக துடைக்கப்பட்டு பளபளப்புடன் காணப்படும். அவற்றில் தன் குடும்பத்தினர், தெரிந்தவர்கள், நண்பர்கள் என பலரையும் ஏற்றிக் கொண்டு யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் உள்ள ஆலயங்களுக்குச் செல்வார். காரைநகர் சிவன் கோவில், பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில், தொண்டமானாறு செல்வச் சந்நதி ஆலயம் போன்றன அவருக்கு மிகவும் விருப்பமான அடிக்கடி செல்லும் ஆலயங்களாகும்.

அவர் இலங்கையில் பல இடங்களுக்கு சென்றது மட்டுமல்லாது. இந்தியா, ஜேர்மனி, சுவிற்சலாந்து, நெதர்லாந்து போன்ற வெளி நாடுகளுக்கும் சுற்றுலா சென்று வந்துள்ளார். விதவிதமான உணவு வகைகளை உண்பதில் விருப்புடையவர். பாடசாலையில் உடன் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மிகவும் ருசியான, வகை வகையான உணவுகளை வாங்கியும், தன் வீட்டிலிருந்தும் கொண்டு சென்று பகிர்ந்துண்பதில் விருப்புடையவர். மாணவர்களுக்கும் சிற்றுண்டிகள் வழங்கி மகிழ்வார். அதற்காக எந்தபிரதி உபகாரத்தையும் எதிர்பார்க்க மாட்டார். அதேபோல் வீட்டிற்கு தேவையான அத்தியாவசியப் பொருட் களிலிருந்து ஆடம்பர பொருட்கள் வரை பல்வேறு வகைகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்குவார். வீட்டில் இல்லாத பொருட்களே இல்லை எனலாம். வாகனங்கள் கூட ஒன்றிக்கு மேலதிகமாக வைத்திருப்பார்.

எல்லா விடயங்களும் சிறப்பாகச் செயற்பட்ட நவரத்தினராசா ஆசிரியர் தனக்கு ஏற்பட்ட சுகவீனத்தில் இருந்தும் விடுபட தன்னால் ஆன முயற்சிகளையும் மேற்கொண்டார். ஆயினும் பிறந்தவர்கள் எல்லோரும் ஒரு நாள் இறந்தே ஆக வேண்டும் என்ற இயற்கை நியதிக் கேற்ப யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர் சிகிச்சை பயனின்றி 20.08.2022 அன்று சனிக்கிழமை இரவு அபரபக்க நவமித் திதியில் இறைவன் அடியினைச் சென்றடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்...
## அமரர் நடராசா நவரத்தினராஜா

கொக்குவில் பதியுறைந்து அருள்பாலிக்கும் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாளது அடியவராகவும், ஆலயத்தின் உபயகாரர்களில் ஒருவராகவும் இருந்த அமரர் நடராசா நவரத்தினராஜா அவர்களது இழப்பு, அவரது குடும்பத்திற்கும் அவர்தம் உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும் பேரிழப்பாகும்.

நல்லதொரு குடும்பத் தலைவனாக, பிள்ளைகளுக்கு நல்ல தந்தையாக, மாணவர்களுக்கு நல் ஆசிரியராக தன் கடமைகளை அமைதியாகவும் சிறப்பாகவும் நிறைவேற்றிய அமரர் நவரத்தினராஜா அவர்கள் தனது பிறவிப் பயனை முடித்து இறைவனை நாடியுள்ளார்.

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்**

என்ற வள்ளுவன் வாக்கிற்கமைய உலகியல் வாழ்வை சிறப்பான முறையில் வாழ்ந்து முடித்த அமரர் அவர்கள், வானுலகின் தெய்வ முறையில் வைத்து மதிக்கப்படுவார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை எனலாம்.

திருப்பணியை தன் முதற் பணியாய் ஆற்றிய அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல நந்தாவில் கற்புலத்து மனோன்மணித் தாயினது பாதக் கமலங்களை அடைய வேண்டுமென பிரார்த்திப்பதோடு, ஆறாத் துயரில் இருக்கும் குடும்பத்தினருக்கு அம்பாளது துணை என்றும் இருக்க பிராத்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சிவஸ்ரீ.விஸ்வ விஜயகுமாரக் குருக்கள்**
ஆலய பிரதம குருக்கள்
கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி
அம்பாள் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பாவின் வாழ்க்கைப் பதிவுகளில் சில...










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவியின் புலம்பல்....

பேரின்பம் கண்டு வாழ்ந்து
பேரன்பு கொண்ட எந்தன் பாசமே
கண்ணின் மணியாய் சுவர்ணலதாவையும்
கண்ணுக்கு கண்ணான காண்டீபனையும்
முத்தான செல்வங்களாய்
என்கையில் தந்தவரே
கரம்பிடித்த காலம் முதல்
கண்கலங்க விட்டதில்லை
செல்லும் இடம் சொல்வதில்லை
சென்ற இடமும் சொல்லவில்லை
எல்லையில்லா அன்பைத் தந்துவிட்டு
எல்லை கடந்து சென்றதெங்கே?
நான் கதறும் ஓசை வான்வெளியில்
உங்கள் நிழல் தேடி வரவில்லையா?

**மனைவி**



*"பொய் சொல்லித் தப்பிக்க நினைக்காதே.
உண்மையைச் சொல்லி மாட்டிக்கொள்.
ஏனென்றால் பொய் வாழவிடாது.
உண்மை சாகவிடாது."*

*- சுவாமி விவேகானந்தர்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புள்ள அப்பாவை பற்றி ...

"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்பதற்கு இணங்க என்னை சிறு வயதிலிருந்து வழிகாட்டியவர் எனது அப்பா. எங்கு சென்றாலும் என்னை அவரே அழைத்துச் செல்வார் நான் படித்து முடித்து வேலை கிடைத்தவுடனும் என்னை திருகோணமலைக்கு கப்பலில் கூட்டிச்சென்று அங்கு நியமனக் கடிதம் பெற்று பின் வவுனியா கூட்டிச் சென்று அங்கு தங்குவதற்கு இடம் எடுத்து தந்து வவுனியா பொது வைத்தியசாலையில் கடமையாற்றும் பொழுது கப்பலில் அடிக்கடி வந்து பார்ப்பார். பின் இங்கு வந்து தெல்லிப்பழை வைத்தியசாலை செல்லும் போது பஸ்ஸிற்கு கொண்டு சென்று விடுவார். பின் தற்பொழுது உடுவிலில் வேலை செய்யும் பொழுதும் அங்கு காலையில் கூட்டிச்சென்று பின் மாலை என்னை அழைத்துச் செல்வதற்காக வந்து நிற்பார். தனது உடம்பில் நோய் காணப் பட்டாலும் அதை வெளிக்காட்டாமல் மற்றவர்களுக்கு உதவி செய்வதில் உத்தமர்.

எந்த நேரமும் வாகனத்தில் செல்வது அவரது விருப்பம் தூரத்தை பொருட்படுத்த மாட்டார். கடைசியில் சிறிது காலப்பகுதியில் தான் இயங்க முடியாமல் இருந்தார். அப்பொழுதும் மற்றவர்களுக்கு தனது துன்பத்தை வெளிக்காட்டவில்லை. கடைசியில் வைத்தியசாலையில் இருந்த பொழுதும் எதுவும் வெளிக்காட்டாமல் இறைவனடி சேர்ந்தார்.


அப்பாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.


**பாசமுள்ள மகள்**
**சுவர்ணலதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய சுற்றுப்பயண பதிவுகளில் சில...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைகளின் பிரிவுத்துயர்

கண்டிப்பானவர் கருணை மிக்கவர்
அரவனைக்கும் திறமை படைத்தவர்
உடல் உள உறுதி அதிகம் உள்ளவர்
உதவும் உயர்குணம் நிறைந்தே மிளிர்பவர்

வழிகாட்டி எம்மை வாழ வைத்தவர் – வாழ்வில்
ஒளியூட்டி என்றும் உயர வைத்தவர்
பசியுடன் வந்தோரை – என்றும்
புசிக்க வைத்துப் பார்த்து மகிழ்ந்தவர்

சகோதர பாசம் அதிகம் உள்ளவர்
சவால்கள் வரினும் சற்றும் தளைத்திலர்
நிமிர்ந்து நிற்கும் ஆற்றல் படைத்தவர்
நில மலை நிறைகோல் பண்பு நிறைந்தவர்

இறைவனை என்றும் இறைஞ்சியே நின்றவர்
இறைபதம் அடைந்துடன் இனிதே இருப்பவர்
பற்றற்றான் தாளினைப் பற்றி நிற்கிறோம்
ஆத்மசாந்தி அடைந்துடன் இருந்திட
எங்கள் மனதில் என்றும் நிலைத்தவர்



*"கட்டளையிட விரும்புபவன் முதலில்
பணிவதற்கு கற்றுக்கொள்ள வேண்டும்"*

*- அரிஸ்ராட்டில்-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர்களின் பிரிவுத்துயர்...

கூடப்பிறந்தவுயர் சோதரனே
குலவிளக்கே ஏன் மறைந்தாய்
தேடற்கரியவுயர் செல்வமாய்
செகந்தனிலே நீ மிளிர்ந்தாய்
வாடித்துடிக்கின்றோம் யாம்
வையகத்தே நின்பிரிவால்
ஓடி நீ வந்தெங்கள்
உற்ற துயர் தீர்த்திடுவாய்
அன்பிலுயர் சகோதரனாய்
அவனியிலே மிளிர்ந்தவரே
ஆற்றொனா துயரடைந்தோம்
அறிவொளியே நீ அணைந்தமையால்
ஊற்றெனவே விழிநீர் சொரிய
உனையாம் தேடுகிறோம்
உடன் பிறப்பே எங்கள்
பெருந்துயரைத் தீர்த்திடவா

## பேரப்பிள்ளைகள் மனதிலிருந்து...

தாத்தா என்று நாம் அன்போடு அழைப்பதற்கு இனி யார் எமக்கு உள்ளார்கள். எனக்கு தின்பண்டங்கள் வாங்கி தந்தீர்கள். முன்பள்ளிக்கு, கோயில்களுக்கு எல்லாம் கூட்டிச் சென்றீர்கள். வைத்தியசாலையில் இருக்கும் போதும் என்னை பற்றி கதைப்பீர்கள். தங்கச்சி பிறந்த செய்தி கேட்டும் தங்கச்சியை பார்க்காமல் சென்று விட்டீர்களே தாத்தா. இனி உங்களை எங்கு நாம் காண்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தநாள் விழாவில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்துனிமார் புலம்பல்

மதிப்பிலுயர் மைத்துனராய்
மாநிலத்தே மிளிர்ந்தவரே
அதிதுயரம் எமக்களித்து
அகன்று நீர் சென்றதேனோ
பதியினுக்கு ஏற்ற நல்ல
பண்பிலுயர் தலைவனே – இன்று
விதிவசத்தால் நீரெம்மை
விரைவாகப் பிரிந்ததேனோ
உருகிமனம் வாடிடவே
உம் வதனம் தேடுகின்றோம்
கருணை மனங்கொண்டவரே
அருகில் வரமாட்டீரோ

## மருமக்கள்

அன்பிலே பிணைப்புண்டார்
அறக்கடவுள் போல் தெரிந்தார்.
அவர் பிள்ளைகள் போல் எமைப் பார்த்தார்
அவனியிலே தலைவனென்று
நாம் கொண்டோம் நெஞ்சினிலே
ஆண்டவனாய் ஆசானாய்
ஆப்த நண்பனுமாய்
தோற்றம் கொண்டார்
ஆனமட்டும் பழகி வந்தார் – அவர்
ஆருயிர் பிரியும்போது அழுது கொண்டே பிரார்த்தித்தோம்.
ஆசைமாமா சாந்தி கொள்ள
ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புடைத் தோன்றல்

**"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தோர்**
**உள்ளத்தில் எல்லாம் உளர்"**

என்ற வள்ளுவர் வாக்கிற்கு அடியொற்றி வாழ்ந்தவர் திரு நடராசா நவரத்தினராசா ஆசிரியர் அவர்கள். அவர் அன்று தொட்டு இன்று வரை ஒரே மாதிரியான தோற்றப் பொலிவுடன் காணப் பட்டவர். என்நேரமும் தோளில் ஒரு தோற்பையும் காணப்படும். இத்தோற்றம் அவர் வாழ்ந்த சமூகத்தில் என்றும் நிலைத்து நிற்கும். திரு.நவம் ஆசிரியர் அவர்களை 1983ம் ஆண்டு யா/பலாலி ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி ஆசிரியராக இருந்த காலத்திலிருந்து அவரைத் தெரிந்து கொண்டவர்களில் நானும் ஒருவர். அன்றைய காலத்தில் பலாலி ஆசிரியர் மன்றத்தின் செயலாளராகச் செயற் பட்டமையானது அவரது ஆளுமையின் வெளிப்பாட்டினை காட்டி நின்றது. அதனைத் தொடர்ந்து இடப்பெயர்வு காரணமாக நானும் அவரது துணையியாரும் யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயத்தில் ஒன்றாகக் கற்பிக்க கிடைத்தமையால் அவர்களது குடும்பம் எனக்கும் எமது குடும்பத்தவர்களுக்கும் இடையில் நல்ல நட்பு கிடைத்தது மகிழ்ச்சியளித்ததாக இருந்தது.

அதனைத் தொடர்ந்து யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயத்தில் அதிபர் கடமையேற்ற காலத்தில் (2007) திருவாளர் நவம் மாஸ்டர் அங்கு சிரேஷ்ட வகுப்பு மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியராக் கடமையாற்றினார். சுகாதாரமும் உடற்கல்வியும், விஞ்ஞானம் அவர் கற்பித்த பாடங்கள். க.பொ.த சா/தரத்தில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்தினை மிகச் சிறப்பாக கற்பித்து 100% பாட அடைவினை பெற்றுக் கொடுப்பார். எப்போதும் மாணவர் மனத்தில் நிறைந்த ஆசிரியராக இருந்ததுடன் மாணவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தைக் கொண்டு அவர்களுக்கு பசி, துன்பம் இருப்பதை அறிந்தால் தானே தேநீர்சாலையில் தேநீர் சிற்றுண்டி வாங்கிக் கொடுத்து பின் கற்பிப்பார். இதன் காரணமாகவும் அன்பான உரையாடல் காரணமாகவும் மாணவர் விரும்பும் ஆசிரியராக காணப்பட்டார்.

அத்துடன் சகஆசிரியர்களுடன் அன்புடனும் பண்புடனும் பழகி வருவதால் பாடசாலை சமூகம் அவரை நட்புடன் பாராட்டி வருவதை காணக்கூடியதாக இருந்தது. அன்றைய நாட்களில் பாடசாலையில் இலவசப் பாடநூல் விநியோகப் பொறுப்பை ஏற்றுத் திறம்பட செயலாற்றி பாடசாலையுள்ள அனைத்து மாணவருக்கும் புத்தகங்களை எடுத்து வந்து கொடுத்துள்ளார். அவரது கனிவான பேச்சு சமூகத்தில் நல்ல நண்பர்களைச் சேர்த்துக் கொடுத்தது என்று கூறலாம். சமூகத்தில் யாருக்கு உதவி தேவைப்பட்டாலும் முன்வந்து நல்லாலோசனை வழங்கி அத்துடன் உதவியும் செய்து வந்துள்ளார். இவரது செயற் பாடுகளுக்கு துணைவியாரும் பக்க பலமாக இருந்து வந்தவர் என்பது கண்கூடு. தாம் கற்பித்த பிள்ளைகளை தம் பிள்ளைகள் போல் அவரும் அவரது துணைவியாரும் கல்வியினை புகட்டியதன் பெறுபேறு அவர்களின் பிள்ளைகளை நல்ல நிலையில் கொண்டுவர முடிந்துள்ளது எனலாம்.

அவர் கடவுள் மீது நிறைந்த நம்பிக்கை கொண்டவர் இல்வாழ்வான் என்பவன்

**"தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்று ஆங்கு**
**ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை"**

என்ற பொய்யா மொழி வாக்கிற்கு அமைய தன்னுடைய மூத்தோர் கடமைகள், கோயில் கடமைகள் விருந்தோம்பல் தனது குடும்பம்தான் என்ற வகையில் மிகவும் விருப்புடன் அவ்வவ் கடமைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறாது செய்து வந்தவர் அதற்கு மிகவும் உறுதுணையாக இருந்தவர் அவரது துணைவியார். இதனை நான் கூறக் காரணம் கந்தசட்டி காலம் என்றால் சாவகச்சேரியின் ஒரு கந்தசாமி கோவில் விழா, நவராத்திரி காலம், சீரணி அம்மன், சந்நிதி முருகன், இணுவில் காரைக்கால் சிவன் என்றவாறு வருடத்தில் பல நாட்கள் அவர்களின் கோயில் கடமையாக இருப்பது உண்டு.

தமது குடும்பத்தில் தமது பிள்ளைகளை உரிய கல்வித் துறைகளை தெரிவு செய்து நல்ல தந்தையாகவும் தொழில் வழி காட்டியாகவும் இருந்து வழிநடத்தியவர். இவரது வழிகாட்டலில் பிள்ளைகள் நல்ல தொழிலில் உள்ளனர். இவரது இழப்பு அன்னாரது குடும்பத்துக்கு மட்டும் அல்லாது அயல் சமூகத்தவர்கள் உற்றார் உறவினர், நண்பர்கள் யாவருக்கும் பேரிழப்பாகும். எல்லோருடனும் பண்புடனும் பாசத்துடனும் வாழ்ந்த அன்னாரின் இன்னுயிற் இறைவனுடன் என்றும் இணையுற்றிக்க பிராத்திக்கின்றேன்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**தர்மசாங்ரம்**

" பிறர் துன்பத்தை தன் துன்பமாகவும் பிறர் மகிழ்சியை தன் மகிழ்ச்சியாகவும் நினைக்கின்றவரே மனிதரில் சிறந்தவர் ஆவார். அவரிடம் சைத்தன்யம் விழிப்படாது விட்டது என்பது உண்மையாகும்."

**செல்வி. கமலநாயகி கதிர்காமலிங்கம்**
ஓய்வுநிலை அதிபர்
யா/கொக்குவில் ஸ்ரீஇராமகிருஷ்ண வித்தியாலயம்
கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் குடும்ப அன்பின் சிகரமும் ஆறாத் துயரமும்

2008ஆம் ஆண்டு தை மாதம் 06ஆந் தேதி எம் குடும்பத்தினரின் மனதை வென்ற அன்பான நட்புறவாக எமக்கு இறைவனால் அளிக்கப்பட்டவர் தான் எம் நவா சேர் அவரின் பெயரை எழுதக்கூட வேதனையில் பேனா மறுக்கிறது.

மனதிலே கள்ளங்கபடமில்லை. என் மீது மகள் என்ற உறவை வளர்த்துக் கொண்டதால் அவருக்கு ஒரு மருமகன் மூன்று பேரக் குழந்தைகள் கிடைத்தனர் போலும். எம்மை விலகாது எமக்கு சகல விதங்களிலும் ஒத்தாசையாக உறுதுணையாக மனதுக்கு வலிமை சேர்த்தார். உண்மையில் சேர் இங்கு வசிக்கும் நம்பிக்கையில் என் கணவர் தனது இடமாற்றத்தினைக் கூட துணிந்து பெற்று தூர தேசங்கள் போய் வந்தார்.

அவர் வீட்டுக்கு வரும்போது எம்மால் முழுமையான பாதுகாப்பை உணர முடிந்தது. இன்றும் அவர் எம்மைப் பிரிந்தது கனவு போலவே உள்ளது. உண்மை உறைக்கையில் கண்கள் நனைகிறது. இறுதிக் காலத்தில் அவரின் குடும்பத்தினர் என்னை ஆறுதல் கூறி சிகிச்சைக்குச் செல்ல உடன்பட வைத்தனர். அதுவும் நன்மைக்கே என எண்ணி சிகிச்சைக்கு அனுப்பினோம். ஆனால் விதி விடவில்லை. எம் மனமும் ஆறவில்லை. நிச்சயமாக அவரின் தூய ஆத்மா எம் குடும்பத்தைப் பாதுகாப்பாக வழிநடத்திச் செல்லும். அவருக்கும் எம்மாலான ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளும் எப்போதும் இருக்கும்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**திரு.திருமதி இராசவிசாகன்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# காப்பு

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

துதிப்போர்க்கு வல்லினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்-கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஃஷ்டி கவசந் தனை.

சஷ்டியை நோக்கச் சரஹணபவனார்
சிஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வாகனனார்
கையில் வேலால் எனைக்காக்கவென்று வந்து
வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலாம் எண்டிசை போற்ற
மந்திரவடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹணபவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹ வீரா நமோநம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளிரொளி ஐயும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செய் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையம்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இரு தொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென்று எண்ணும்
என்தலை வைத்து உன் இணையடி காக்க
என்னுயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடி இணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டு கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும் பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதம் அஞ்சனம் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டுக்
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தனலெரி தணல் அதுவாக
விடுவிடு வேலை வெருண்டு அதுஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்து உயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாது ஓட நீஎனக்கு அருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்து தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்து உறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தில் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே
காரார் கழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யான் உனைப் பாட
எனைத்தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருளாக
அன்புடன் இரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவள் ஆமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என்மீதுன் மனம்மகிழ்ந்து அருளித்
தஞ்சம் என்றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பி
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சக்ஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் முப்பத்து ஆறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறு அணிய
அட்டதிக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்த்தங்கு அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்து அடி
அறிந்து எனது உள்ளம் அட்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்து உணவாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுதளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத்தடுத்து ஆட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நடம் இடுவாய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

- கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளறு பதிகம்

பண் : பியந்தைக் காந்தாரம் இராகம் : நவரோஸ்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்குமிகவே. 01

என்பொடு கொம்பொடாமை இவை மார்பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடிவந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன் றொடேழு பதினெட்டொடாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே. 02

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வமான பலவும்
அருநெறி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே. 03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 04

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்தனோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உரும் இடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 05

வாள்வரி அதள தாடை வரிகோவணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்குமிகவே. 06

செப்பிள முலை நன் மங்கை ஒரு பாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்குமிகவே. 07

வேள்பட விழி செய்தன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வான்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரயன் றனோடும்
இடராக வந்து நலியா
ஆழ் கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்குமிகவே. 08

பல பல வேடமாகும் பரன் நாரிபாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர் மிசையோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்குமிகவே. 09

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேடவிகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரோடமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்குமிகவே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன் அமர் பொழில்கொள் ஆலை விளை
செந்நெல்துன்னி
வளர் செம்பொன் எங்கும் திகழ
நான்முகன் ஆதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 11

## சர்வதேச தினங்கள்

- சர்வதேச குடிநீர் தினம் – மார்ச் 22
- சர்வதேச புத்தக தினம் – ஏப்ரல் 23
- சர்வதேச சிறுவர் தினம் – ஒக்டோபர் 01
- சர்வதேச சுற்றாடல் தினம் – யூன் 05
- சர்வதேச முதியோர் தினம் – ஒக்டோபர் 01
- சர்வதேச முட்டாள் தினம் – ஏப்ரல் 01
- சர்வதேச தொழிலாளர் தினம் – மே01



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசகமே முமளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித்தாக
வுண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடும் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வடநூற் கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந்தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலு மன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பார்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங்கொண்டு தொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமுமவ தான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள்
வாய்நளினா சனஞ்சேர்
செல்விக் கரிதன் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட ளவிற்பணியச் செய்
வாய்படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும்விளம்பி லுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிவபுராணம்

"தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் எனும் தேன்"

நமச்சிவாய வாழ்க! நாதன்றாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏக னனேகன் இறைவன் அடிவாழ்க!
வேகங் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரம்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க!
ஈச னடிபோற்றி எந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னைப் அகல்விக்கும் நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனம்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாம
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா அரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே்
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சி

போற்றி ! என்வாழ் முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத்து எமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்!
சேற்றிதழ்க் கமலங்கண் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே!
ஏற்றுயர் கொடியுடையாய்! எனை உடையாய்!
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே ! (01)

அருணன் இந்திரன் திசை அணுகினன்! இருள்போய்
அகன்றது உதயம் நின் மலர்த் திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழ எழ, நயனக்
கடிமலர் மலர மற்றண்ணல் அங்கண்ணாம்
திரள் நிரை அறுபதம் முரல்வன் இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே!
அருள் நிதி தரவரும் ஆனந்த மலையே!
அலைகடலே பள்ளி எழுந்தருளாயே! (02)

கூவின பூங்குயில்கூவின கோழி
குருகுகள் இயம்பின் இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளி ஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்குத்
தேவ! நற் செறிகழற் றாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே!
யாவரும் அறிவரியாய் எமக்கெளியாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே ! (03)

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்!
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே!
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே ! (04)

"பூதங்கள் தோறும் நின்றாய்! "எனின் அல்லால்
"போக்கிலன் வரவிலன்" என நினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறியோம் உனைக் கண்டறிவாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா!
சிந்தனைக் கும் அரியாய்!எங்கண் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே ! (05)

பப்பற வீட்டிருந் துணரும் நின் அடியார்
பந்தனை வந்தறுத்தார் அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத்தியல்பின்
வணங்குகின்றார் அணங்கின் மணவாளா!
செப்புறு கமலம் கண் மலருந்தண்வயல் சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே!
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே ! (06)

அதுபழச் சுவையென அமுதென அறிதற்(கு)
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு,இவன் அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கெழுந்தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தரகோச
மங்கையுள்ளாய்! திருப்பெருந்துறை மன்னா!
எது எமைப் பணிகொள்ளும் றது கேட்போம்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே ! (07)

முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்!
மூவரும் அறிகிலர் யாவர் மற்று அறிவார்?
பந்தணை விரலியும் நீயும் நின் அடியார்
பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந்துறை யுறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந்து ஆண்டாய்!
ஆரமுதே! பள்ளி எழுந்தருளாயே! (08)

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப் பொருளே! உனதொழுப் படியோங்கள்
மண்ணகத்தே வந்து வாழச் செய்தானே!
வண்திருப் பெருந்துறையாய் வழி அடியோம்
கண்ணகதே நின்று களிதரு தேனே!
கடலமுதே!கரும்பே!விரும்படியார்
எண்ணகத்தாய்! உலகுக்கு உயிரானாய்!
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே ! (09)

"புவனியிற் போய் பிறவாமையின் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற வாறென்று" நோக்கித்
திருப்பெருந் துறையுறைவாய்!திருமாலாம்
அவன் விருப்பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும் நின் அலர்ந்த மெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்!
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே! (10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன்வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேஎன்னே
ஈதே எம்தோழி பரிசேலோ ரெம்பாவாய். 01

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசுமிடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க்கன்பார்யாம்ஆரேலோ ரெம்பாவாய். 02

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந்தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடை திறவாய்
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்தாட்கொண்டாற்பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 03

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோ ம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 04

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடை திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்(று)
ஓலமிடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 05

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.
06

அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாயின்னந்துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை யாமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பவாய். 08

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே
– பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். 09

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையால் குடைந்து குடைந்து உன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்.

11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்
–பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.
15

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.
16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.
17



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற் போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்(று)
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம் கேள்
எம்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

20



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ மஹா லிங்காஷ்டகம்

ப்ரஹ்ம முராரி ஸுரார்ச்சித லிங்கம்
நிர்மல பாஸித சோபித லிங்கம்
ஜன்மஜ துக்க விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் 01

தேவ முனி ப்ரவரார்ச்சித லிங்கம்
காம தஹன கருணாகரலிங்கம்
ராவணதர்ப்ப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் 02

ஸர்வ ஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்தி விவர்த்தன காரண லிங்கம்
ஸித்த ஸுராஸுர வந்தித லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் 03

கனக மஹாமணி பூக்ஷித லிங்கம்
பணிபதி வேஷ்டித சோபித லிங்கம்
தக்ஷ ஸுயஞ்ஞ விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் 04

குங்கும சந்தன லேபித லிங்கம்
பங்கஜ ஹார ஸுசோபித லிங்கம்
ஸஞ்சித பாப விநாசன லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் 05

தேவ கணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர் பக்திபிரவேச லிங்கம்
தினகர கோடி ப்ரபாகர லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் 06

அக்ஷ்ட தளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்ட தரித்ர விநாசக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸ்தாசிவ லிங்கம் 07

ஸுரகுரு ஸுவர பூஜித லிங்கம்
ஸுரவன புஷ்ப ஸ்தார்ச்சித லிங்கம்
பராமபதம் பரமாத்மக லிங்கம்
தத் ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம் 08

லிங்காஷ்டகம் இதம்புண்யம் யபடேத் சிவ ஸந்நிதௌ
சிவலோக மவாப்னோதி சிவேன ஸஹ மோததே 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி

* தம்பிப்பிள்ளை நடராசா
\+
* நாகலிங்கம் இரத்தினம்

→ *நவரத்தினராசா

→ ஜீவரத்தினராசா
\+
தனபாலசுந்தரி
↓
* காயத்திரி
ஜீவா
கோபால்

→ ஜெயரத்தினராசா
\+
சுமதி
↓
கஸ்தூரி

* சடையர் சின்னத்துரை
\+
* சுப்பர் வள்ளிப்பிள்ளை
↓
* மயில்வாகனம்
சுபத்திரை
நல்லலட்சுமி
தங்கம்மா
பூபதி
* யோகராசா
இராசேஸ்வரி
* சற்குணதேவி

நவரத்தினராசா + இராசேஸ்வரி
↓
→ சுவர்ணலதா
\+
கேதீஸ்வரன்
↓
அருள்சாயி
ஸாயினி

→ காண்டீபன்
\+
மேரியன்

* - அமரர்களை குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவில்கின்றோம் நன்றிதனை....



எமது குடும்பத் தலைவர்

## அமரர் நடராஜா நவரத்தினராசா

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறியதுடன் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எமது துயரில் பங்குகொண்டவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், அன்னாரின் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் கிரியைகளைத் திறம்பட நடாத்திய ஆச்சாரியார் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"காலத்தினாற் செய்த உதவி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

வளவத்தை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

சாயி பிறிண்டேர்ஸ் - 077 2209474.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்



தூய்மையாக இருப்பதும்
மற்றவர்களிற்கு நன்மை
செய்வதும் தான் எல்லா
வழிபாடுகளினதும் சாரமாகும்.
தீமை செய்பவன் தனக்கும்
மற்றவர்களுக்கும் தீமை
செய்கின்றான்.
நன்மை செய்பவன் தனக்கும்
பிறர்க்கும் நன்மையே செய்கின்றான்.
உடலும் உள்ளமும் தூய்மையின்றி
கோயிலுக்கு போவதும் இறைவனை
வழிபடுவதும் பயனற்றதாகும்.
நேர்மையுடனும் தைரியமாகவும்
பக்தி சிரத்தையுடனும் வாழ்ந்தால்
இறைவனை அடைவது உறுதி.

"நன்னெறியே இறைவணக்கம்"

– சுவாமி விவேகானந்தர் –

ஸ்ரீ சாயி பிறிண்டேர்ஸ் [illegible] கோண்டாவில். T.P: 077 2209474.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org